NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 28 October 2025

# ‘என்யுஎஸ்’ வளாகத்தில் புதிய ஹோட்டல்

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் (என்யுஎஸ்) கெண்ட் ரிட்ஜ் வளாகத்தில் புதிய ஹோட்டல் ஒன்று அடுத்த ஆண்டின் முற்பாதியில் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஹோட்டலுக்கு ‘த ரிட்ஜ்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ஹோட்டல் 185 அறைகளைக் கொண்டிருக்கும்.

ஹோட்டலின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என்யுஎஸின் கணினி மற்றும் கலைகள், சமூக அறிவியல் பள்ளிக்கு அருகில் உள்ள கம்ப்யூட்டிங் டிரைவ்வில் ஹோட்டல் அமைந்துள்ளது.

அதில் மாணவர்களும் வெளிநாடுகளிலிருந்து வரும் கல்விமான்களும் தங்கலாம்.

டீலக்ஸ், பிரிமியர் அறைகள், பிரிமியர் சுவீட்ஸ் என மூன்று வகை அறைகளை ஹோட்டல் கொண்டிருக்கும்.

ஹோட்டலில் 50 மீட்டர் நீளமுள்ள நீச்சல் குளம், 5,800 சதுர மீட்டர் பரப்பளவிலான உடற்பயிற்சிக்கூடம் உட்பட பல்வேறு வசதிகள் இருக்கும்.

அதிவேக இணையச் சேவையையும் கூட்டங்கள் நடத்துவதற்கான அறைகளையும் ஹோட்டல் கொண்டிருக்கும்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.